# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு • ஜூன் 17, 2023

Weekly E-paper • June 17, 2023




# அண்ணாமலையின் காலம் முடிகிறது!

சுப.வீரபாண்டியன்

## முத்தமிழறிஞரின் முதல் படைப்பு!

வெற்றிச்செல்வன்

## கூடா நட்பு கேடாய் முடியும்!

தலையங்கம்

## முதல்வரின் கேள்விக்குப் பதில் சொல்லாத அமித்ஷா!

சாரதா தேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

மாதம் இருமுறை

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு ● ஜூன் 17, 2023

Weekly E-paper ● June 17, 2023


# அண்ணாமலையின் காலம் முடிகிறது!

சுப.வீரபாண்டியன்

*கடந்த பத்தாம் தேதி இரவு, ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா சென்னைக்கு வந்தார். மறுநாள் சென்னை கிண்டியில் உள்ள பெரிய விடுதியில் தங்கியிருந்தார். அவர் வருகையை அடுத்து, பரபரப்பான இரண்டு நிகழ்வுகள் தமிழ்நாட்டில் நடந்திருக்கின்றன.*

*ஒன்று, அனைவரும் அறிந்த, தொடர்ந்து பேசப்பட்டுக் கொண்டிருக்கிற அமைச்சர் செந்தில் பாலாஜி கைது! இன்னொன்று, கடந்த 13 ஆம் தேதி, சென்னை, இராயப்பேட்டை, கட்சி அலுவலகத்தில், இபிஎஸ் தலைமையில் நடைபெற்ற அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் அண்ணாமலைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட கண்டனத் தீர்மானம்!*



*அந்தத் தீர்மானத்திற்கு அவ்வளவு முதன்மை இருக்கிறதா என்று கேட்கத் தோன்றும். ஆம், இருக்கிறது! அது அண்ணாமலைக்கு எதிராக அதிமுக நிறைவேற்றிய தீர்மானம் போலத் தெரியும். ஆனால் உண்மையில், அண்ணாமலையை நீக்குவதற்கு முன்னோட்டமாகப் பாஜக கொண்டு வரச் சொன்ன தீர்மானம் என்று ஒரு செய்தி கசிகின்றது!*

*அந்தச் செய்தி உண்மையாய் இருப்பதற்கே வாய்ப்பு உள்ளது. அண்ணாமலையை எதிர்த்து ஜெயக்குமார் போன்றவர்கள் அங்குமிங்கும் பேசுவது வேறு, மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திலேயே நேரடியாகக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவது வேறு! அந்தத் துணிச்சல் எடப்பாடிக்கு எங்கிருந்து வரும்?மிரட்டாமலேயே அஞ்சக் கூடியவர் எடப்பாடி! அப்படிப்பட்டவர் பாஜக மாநிலத் தலைமைக்கு எதிராக எந்தத் துணைச்சலில் தீர்மானத்தை நிறைவேற்றுவார்?*

*அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு கொடுக்கப்படும் நெருக்கடிகளும், திமுகவுக்கு எதிரானவை என்று ஒரேயடியாக முடிவு கட்டிவிட முடியாது! திமுகவின் தொண்டர்கள் வலிமை, அமைப்பு வலிமை அனைத்தும் பாஜகவுக்கு நன்றாகவே தெரியும். இப்படி எல்லாம் திமுகவை மிரட்டி விட முடியாது என்பதும் அவர்கள் அறிந்ததே! எனவே, அதுவும் ஒரு வகையில் எடப்பாடி குழுவினருக்கு விடப்பட்டுள்ள மிரட்டலாகத்தான் தெரிகிறது!*

*சரி, அண்ணாமலையை பாஜக ஏன் நீக்க வேண்டும்? அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு எதிரான, ஜனநாயகமற்ற, சட்டத்திற்குப் புறம்பான தாக்குதல்கள், எதிர்க்கட்சியான திமுகவுடன் நடைபெறும் மோதல் என்றால், அண்ணாமலை விவகாரம் ஓர் உள்குத்து!*

*கே. டி. ராகவன், காயத்ரி ரகுராம், இப்போது கோமாளி நடிகர் எஸ்வி சேகர் என்று கட்சிக்குள் இருக்கும் பார்ப்பனர்களோடு அண்ணாமலை தொடர்ந்து மோதிக் கொண்டிருக்கிறார். இது உள்ளே இருக்கும் பார்ப்பனத் தலைவர்கள் பலருக்கும் அறவே பிடிக்கவில்லை. இதன் மூலம் அண்ணாமலை பார்ப்பனருக்கு எதிராகப் போர் தொடுக்கும் சுயமரியாதைக்காரர் என்று கருதி விடக்கூடாது. தன்னலம், தன் முனைப்பு (Ego) காரணமாகவே அவர் அப்படிச் செய்து கொண்டிருக்கிறார். எனவே இதற்கு மேலும் அவரை அந்தப் பொறுப்பில் விட்டு வைக்கக் கூடாது என்பது தமிழ்நாடு பாஜகவில் இருக்கிற பெரிய பார்ப்பனத் தலைகள் சிலரின் கருத்தாக இருக்கிறதாம். அந்த அழுத்தம் காரணமாகவே அண்ணாமலையை அப்பொறுப்பிலிருந்து நீக்க பாஜகவின் தில்லி தலைமை முடிவு செய்து இருக்கிறது என்று சொல்கிறார்கள்.*


*அப்படியானால் தமிழ்நாடு பாஜகவிற்கு அடுத்து எச் ராஜா, நாராயணன் திருப்பதி போன்ற ஒரு பார்ப்பனரைத் தலைவராக்கி விடுவார்களா என்று ஐயம் யாருக்கும் வேண்டாம்! அந்தத் துணிச்சல் ஒரு நாளும் தமிழ்நாட்டில் பாஜகவுக்கு வரவே வராது. தமிழ்நாட்டில் அப்படி ஒரு செயலைச் செய்யவே முடியாது என்பது அமித்ஷா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றாகத் தெரியும்! பார்ப்பனர்களின் பேச்சைத் தட்டாமல் கேட்கக்கூடிய, பட்டியல் இனத்தைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராக ஆக்குவதுதான் கட்சியின் திட்டமாம்!*

*எப்படியோ 2024 நாடாளுமன்றத் தேர்தல் வரும்போது, அண்ணாமலை தமிழ்நாட்டு பாஜக தலைவராக இருக்கப் போவதில்லை. அவரின் காலமும், கணக்கும் முடிந்து கொண்டிருக்கின்றன!*

●

# முத்தமிழறிஞரின் முதல் படைப்பு!

**வெற்றிச்செல்வன்**



பெண் விடுதலை, கைம்மை மறுமணம், ஜாதி மறுப்பு, பகுத்தறிவு, புராண எதிர்ப்பு இத்தனை செய்திகளையும் ஒரே ஒரு கட்டுரையில் எழுத முடியுமா? அதுவும் 500-க்கும் குறைவான சொற்களைக் கொண்ட ஒரு சிறிய கட்டுரையில்? முடியும் என்றால் அதற்கான விடைதான் கலைஞர். அந்தக் கட்டுரையின் பெயர் இளமைப்பலி. பேரறிஞர் அண்ணா நடத்திய திராவிட நாடு இதழில் 26.04.1942-இல் கலைஞரின் முதல் படைப்பாக வெளியானது இக்கட்டுரை. கட்டுரையை எழுதியபோது கலைஞரின் வயது 18.

பதினாறு வயதே நிரம்பிய சிறுமிக்கு ஒரு முதியவனை மணம் முடிக்கிறார்கள். அவள் காதலித்த இளைஞனை ஜாதியின் காரணத்தால் மணம் முடிக்க மறுக்கிறார்கள். அந்தோ பரிதாபம்! அம்முதியவர் ஆண்டொன்று தாண்டவில்லை. முதுமையால் மடிகிறார். அந்தக் கைம்பெண்ணின் கவலையை எழுத்தோவியமாக வடிக்கிறார் கலைஞர். அவளுக்கு மறுமணம் செய்வதல்லவா நியாயம் என்கிறார். கைம்பெண்ணின் துயரத்தைக் கலைஞரின் வார்த்தைகளிலேயே காணலாம்.

”கடவுளின் பேரால் மனிதரை ஏமாற்றி வாழும் கூட்டத்தினரின் வைதீக போதனையால் அவள் நல்லுடை அணியாவண்ணம் தடுத்தது. விதவை என்ற பட்டம் விரும்பிக் கொடுத்தது. துயரக் கணையைத் தொடுத்தது. என்னென்றியம்புவது பெற்றோரின் மடமையை? யாதென்றுரைப்பது கைம்மைக் கொடுமையை? மறுமணந்தான் உண்டா மங்கை நல்லாள் இன்பமுற ?”

”மனைவி இறந்தால் மறுதாரம் மணம் புரியும் நீ மங்கையரின் மறுமணத்தை வெறுப்பது நன்றா?” என்று ஆண்களை நோக்கிச் சமத்துவக் கேள்வி கேட்கிறார் சமூகநீதி நாயகர் கலைஞர்.

இந்தக் கட்டுரை வெளியான பின்பு, அண்ணா அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு, கலைஞருக்குக் கிடைத்தது. “எழுதாதே” என்கிறார் அண்ணா, கலைஞரிடம். இளைஞர்கள் படித்து முடித்துவிட்டு அரசியலுக்கு வர வேண்டும் என்பது அண்ணாவின் அக்கறை. அவர்களது அரசியல் வேட்கையினால், படிப்பு பாழாகி விடக் கூடாது என்பது அவர்தம் உள்ளக் கிடக்கை.

கலைஞரின் வாழ்க்கை இன்றைய இளைஞர்களுக்கான அரசியல் பாடம். அவரது எழுத்து இளைய தலைமுறைக்கான அரசியல் வழிகாட்டி. கற்றுத் தெளிவோம் கலைஞரை! ●

# கருப்பும் சிவப்பும் மக்களைத் திரட்டும்!



ஆவணங்களைச் சோதனை செய்யுங்கள்.... அராஜகங்களை அரங்கேற்றாதீர்கள்!

தவறுகள் நடந்திருந்தால் வழக்கு தொடுங்கள்! தவறான பாதையில் போவதை விடுங்கள்!

மிரட்டல்கள் கண்டு அஞ்சியதில்லை! மிசா காலத்திலேயே கழகம் கெஞ்சியதில்லை!

மத்திய அரசின் நடவடிக்கை என்றால் மனிதநேயமே இருக்கக் கூடாதா?

வெட்ட வெட்ட எழுந்து நின்ற இயக்கம்!

முட்டி மோதித் தகர்க்கலாம் என நினைப்பது வெறும் மயக்கம்!

கணக்கெடுக்க வந்தீர்களா..... இல்லை

கனக்கும்

உயிரெடுக்க வந்தீர்களா?

கருப்பும் சிவப்பும் மக்களைத் திரட்டும்!

காவியை என்றும் ஓட ஓட விரட்டும்!!

அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத்துறை நடந்து கொண்டிருக்கும் மனித நேயமற்ற, ஜனநாயக விதிகளை மீறிய அராஜகப் போக்கைத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை கடுமையாகக் கண்டிக்கிறது!

– சுப.வீரபாண்டியன்

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## கூடா நட்பு, கேடாய் முடியும்!

"......இந்த நடவடிக்கையின் மூலமாக திமுகவை மட்டுமில்லாமல் அதிமுகவையும் மிரட்ட முயற்சிக்கிறது பாஜக. கூட்டணியைப் பரிசீலனை செய்வோம் என்று அதிமுக சொன்னதற்கு 'உன்னையும் கைது செய்வோம்' என்று மிரட்டியிருக்கிறது பாஜக" - அமைச்சர் செந்தில் பாலாஜி கைது குறித்து 14-06-2023 அன்று அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் அளித்த நேர்காணலில் இப்படிக் கூறியிருக்கிறார்.



இமயமலையில் ஏறி உச்சியைத் தொட்டாலும், மீண்டும் பள்ளத்தை நோக்கி இறங்கத்தான் வேண்டும்.

இயற்கை சொல்லும் இந்தப் பாடத்தை அலட்சியம் செய்து, இரண்டாம் உலகப் போரின்போது அச்சு நாட்டு அணியில் இணைந்த ஜெர்மானிய இட்லர் தற்கொலை செய்து கொண்டார், இத்தாலிய முசோலினி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதைத்தான் 'வினாச காலே விபரீத புத்தி' என்று வடமொழியில் கூறுவர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுடன் நமக்குக் கருத்து வேறுபாடு இருந்தாலும், அன்று அவர் இருக்கும் வரை "இந்த லேடியா, அந்த மோடியா" என்று பா.ஜ.கவை வாசலில் நிறுத்தி வைத்தார்..

இன்று எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் அணியினர் தங்கள் தலைவியை மறந்து பா.ஜ.கவிடம் சரணாகதி அடைந்து விட்டனர்.

நரியிடம் நீதி கேட்கும் இரண்டு ஆட்டுக் குட்டிகள் போல ஓ.பி.எஸ்/ ஈ.பி.எஸ் பா.ஜ.கவிடம் நின்று கொண்டு இருக்கின்றனர்.

பா.ஜ.க தயவு அ.தி.மு.கவுக்குத் தேவையில்லை. அ.தி.மு.க துணை இல்லாமல் பா.ஜ.க வால் தமிழ்நாட்டில் ஓரிரு இடங்களில் கூட வாக்குகள் பெற முடியாது.

அ.தி.மு.கவை அலட்சியம் செய்யும் சங்கிக் கூட்டத்தை விட்டு அக்கட்சி வெளியேற வேண்டும்.

சங்கிக் கூட்டத்திற்குத் தமிழ் நாட்டில் கதவைத் திறந்து விடும் வரலாற்றுப் பிழையை அ.தி.மு.க செய்திட வேண்டாம்.

ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ, தி.மு.க / அ.தி.மு.கதான் வர வேண்டும்.

"கூடா நட்பு கேடாய் முடியும்" அன்று சொன்னார்கள்.

இப்போது இந்தத் தலையங்கத்தின் தொடக்கத்தைப் படியுங்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகாரில் 'போக்சோ' வழக்குப் பதிவு செய்யப்பட்ட பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் பிரிஜ் பூஷன் கைது செய்யப்படவில்லை



முறைப்படி காரணம் சொல்லாமல் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டு ஓமந்தூரார் மருத்துவமனையில் அமைச்சர் செந்தில் பாலாஜி.

# முதல்வரின் கேள்விக்குப் பதில் சொல்லாத அமித்ஷா!

**சாரதா தேவி**

கடந்த 11.06.2023 அன்று, தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்த ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, 2024 நாடாளுமன்றத் தேர்தலை மய்யப்படுத்தி பல்வேறு தூண்டில்களை தமிழ்மக்களிடையே வீசிப்பார்த்தார், என்றாலும் பயனில்லை.

வேல் யாத்திரை நாடகத்தால் 4 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றதாகக் கருதினார்கள். இப்போது செங்கோல் நாடகமும் முடிந்தது. இப்போது 25 பாராளுமன்ற உறுப்பினர்களை 2024 தேர்தலில் பா.ஜ.க பெற்று விடுமாம், வேலூரில் பேசியிருக்கிறார் அமித்ஷா. அதுசரி! 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 40இல் 25 தொகுதிகளை பா.ஜ.க. எடுத்துக் கொண்டால் எஞ்சியிருக்கும் 15 இடங்களை ஆளுக்கு இரண்டாக அ.தி.மு.க உள்ளிட்டக் கூட்டணிக் கட்சிகள் பிரித்துக் கொள்வார்களோ? அ.தி.மு.க. தன் இருப்பைத் தக்கவைக்கவே போராடும் நிலையில் அது அடித்தாடுமா, அடி பணியுமா? பார்ப்போம்! அது அவர்கள் பிரச்சனை.

அமித்ஷா சொல்கிறார், இரண்டு தமிழர்கள் பிரதமர் ஆகும் வாய்ப்பைத் தி.மு.க. கெடுத்துவிட்டதாம்! ஒருவர் காமராசர், மற்றவர் மூப்பனாராம். ஜவஹர்லால் நேருவுக்குப் பின்னர், பிரதமர்களை உருவாக்கியவர் 'கிங்மேக்கர்' காமராசர்! அவர் தானே (கிங்) பிரதமராக எப்போதும் விரும்பியதில்லை. மூப்பனாருக்கு அப்படி ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனாலும் தி.மு.க.மீது பழிபோட வேண்டுமென இப்படிப் புதுக்கதையை அவிழ்த்து விட்டிருக்கும் அமித்ஷா, இப்போது கூட அண்ணாமலை, தமிழிசை, எல்.முருகன், நயினார் நாகேந்திரன், கரு.நாகராசன், வானதி சீனிவாசன் இவர்களில் யாரையாவது பிரதமர் ஆக்கலாமே!

அமித்ஷா தமிழ்நாட்டுக்கு வருமுன்னர் சேலத்தில் கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட முதலமைச்சரும் , தி.மு. கழகத் தலைவருமான ஸ்டாலின் அவர்கள், 2004 முதல் 2013 வரை தி.மு.க அங்கம் வகித்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் என்னென்ன சிறப்புத் திட்டங்களைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டு வந்தார்கள் என்பதைப் பட்டியலிட்டார். அதுபோல திராவிட மாடல் அரசு என்னென்னத் திட்டங்களைத் தமிழக மக்களுக்குக் கொடுத்துள்ளது என்பதையும் கூறி, அதே போல கடந்த 9 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழ் நாட்டிற்கு என்னென்ன செய்தது என்பதை அமித்ஷா பட்டியலிட்டுச் சொல்வாரா என்று கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்கு அமித்ஷா ஒன்றிய அரசு வழக்கமாகத் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கும் நிதியைச் சொல்லி, அவ்வளவு கொடுத்தோம், இவ்வளவு கொடுத்தோம் என்று கொட்டினாரே தவிர, வேறு ஒன்றுமே சொல்ல வில்லை, பட்டியலிடவில்லை.

பா.ஜ.க. ஆட்சி செய்த 9 ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்கான ஒரே ஒரு சிறப்புத் திட்டம் என அறிவிக்கப்பட்டது மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைதான். 2015இல் அன்றைய பா.ஜ.க.வின் நிதி அமைச்சர் மறைந்த அருண் ஜெட்லியால் முன்மொழியப்பட்டு, பிரதமர் மோடியால் அடிக்கல் நாட்டப்பட்டது. அத்திட்டம் 2023 வரை 10% கூட நிறைவேற்றப் படவில்லை. ஆனால் ஹிமாச்சலப் பிரதேசம், பிலாஸ்பூரில் 2017இல் அடிக்கல் நாட்டப்பட்டு 2022இல் திறக்கப்பட்டு விட்டது. பஞ்சாப் மாநிலம், பதிண்டாவில் 2015இல் அடிக்கல் நாட்டப்பட்டு, 2019இல் திறக்கப்பட்டுவிட்டது. மற்ற மாநிலங்களுக்கு, சொந்த நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தவர்கள், மதுரை எய்ம்ஸ்க்கு மட்டும் ஜப்பானிடம் கையேந்திக்கொண்டு இருக்கிறது.

2004 முதல் 2013 வரை ஒன்றியத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் தி.மு.கழகம் பங்குபெற்ற அந்தக் காலத்தில் தான், சென்னை மெட்ரோ ரயில் திட்டம், தமிழுக்குச் செம்மொழித் தகுதி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், ஒரகடத்தில் தேசிய மோட்டார் வாகனச் சோதனை மற்றும் ஆராய்ச்சி மையம், சேலம் குளிர் உருட்டாலை, தாம்பரம் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், சென்னை துறைமுகம் மதுரவாயல் பறக்கும் சாலை திட்டம், சென்னைக்கு அருகில் கடல்சார் தேசிய பல்கலைக்கழகம், கிண்டி கத்திபாரா, பாடி, கோயம்பேடு ஆகிய இடங்களில் பெரிய மேம்பாலங்கள் என்பவை உள்ளிட்ட மிக முக்கியமான 69 சிறப்புத் திட்டங்களைத் தமிழ் நாட்டிற்குத் தி.மு.க அரசு கொண்டு வந்தது.

கடந்த 9 ஆண்டுகளில் பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி, நீட், உதய் மின் திட்டம், இந்தி திணிப்பு, இரயில்வே, வங்கி போன்ற நிறுவனங்களில் வடநாட்டவர் நியமனம் என பெரும் பாதிப்புகளை மக்கள் சந்தித்து வருகிறார்கள்.

இந்திய ஒன்றியத்தின் முன்னோடியாகத் திகழ்வது தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு.

அமித்ஷா எத்தனை முறை இங்கு வந்து பேசினாலும் 40 தொகுதிகளிலும் தி.மு.க முற்போக்குக் கூட்டணியே வெல்லும் என்பதை அமித்ஷா புரிந்திருப்பார் என்று நம்புகிறோம். ●

